வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2845/ஆ1/2023 நாள்.28.07.2023

----

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பள்ளிகளில் பள்ளித் தலைமை ஆசிரியரால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை – தொடர்பாக.

பார்வை : சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநரால் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட நாள் 18.07.2023 மற்றும் 25.07.2023

----

பார்வையில் காணும் இயக்குநரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் சார்ந்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது.

- பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்ட இலவச நலத்திட்டங்கள் விவரம், TNDSE appல் மட்டுமே update செய்யப்பட வேண்டும்.

- மாணாக்கர்களுக்கு இலவச பேருந்து அட்டைகள் வழங்குதல் சார்ந்து போக்குவரத்து துறை மூலம் படிவங்களை பெற்று மாணவர்கள் விவரங்கள் பூர்த்தி செய்து Google formல் update செய்யப்படவேண்டும்.

- 6 முதல் 9ஆம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களில் மீத்திறன் குறைந்த மாணாக்கர்களை கண்டெடுத்து Bridge Course நடத்தப்பட வேண்டும். 6 முதல் 10ஆம் வகுப்பு வரை எழுதப் படிக்க தெரியாத மாணாக்கர்களுக்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் தனிக்கவனம் செலுத்தி அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

- **மாணாக்கர்கள் வருகை மற்றும் ஆசிரியர்கள் வருகை இரண்டும் EMIS Portalலில் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படவேண்டும். பதிவேடுகளில் பராமரித்தல் கூடாது.**

- இலவச நலத்திட்டங்கள் சார்ந்த விவரங்கள் EMIS இணையதளத்தில் மட்டுமே பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

- NEET தேர்வில் தேர்ச்சி பெற்று ஒதுக்கீடு பெற்ற மாணாக்கர்கள் Government

*quota online* விண்ணப்பத்தில் பதிவுகள் மேற்கொள்ளும்போது வரிசை எண்.13(B) *Government RTE* என தெரிவிக்கப்பட்டுள்ள படிவத்தில் "*Yes*" என பதியும்படி தலைமை ஆசிரியர்களால் மாணாக்கர்களுக்கு அறிவுரை வழங்கப்படவேண்டும்.

- பள்ளிகளின் அட்டவணை *(Time table)* தலைமை ஆசிரியர்களால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும் நிலையில் ஏற்படும் சிக்கல்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் ஆய்வு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

- பள்ளிகளில் ஆசிரியர்களின் விடுப்புகள் *EMIS* வழியாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

- *Health screen – State level*ல் 30% மட்டுமே பணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாநில சராசரி 70% விழுக்காட்டினை பெற பாடவேளை அல்லாத ஓய்வு நேரத்தில் இப்பணி மேற்கொள்ள தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

- கற்றல் குறைபாடுகளில் பின் தங்கிய தொடக்கப் பள்ளிகளில் *(Below performing primary schools)* பின்பற்றப்படுகிற பாடக் குறிப்பேடுகள் *(Notes of lesson)* கருத்து சார்ந்த *(concept oriented)* ஆக இருத்தல் வேண்டும். அதற்கான நடவடிக்கை பள்ளித் தலைமை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- தலைமை ஆசிரியர்களுக்கான விடுப்பு எடுக்கும் போது விடுப்பின் தன்மையை *EMIS* இணைய வழியாக விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிப்பது முதன்மைக் கல்வி அலுவலரால் *e-profile update* செய்யப்படும்.

- மாநில அளவில் *Battery test*ல் வேலூர் மாவட்டம் கடந்த வாரம் முதலிடம் பெற்றது, கடந்த வாரத்தை விட இவ்வாரம் 2% உயர்ந்துள்ளது – பள்ளிக் கல்வித் துறையால் பாராட்டுகள் தெரிவிக்கப்படுகிறது.

- *Health screen – State level*ல் 30% மட்டுமே பணிகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாநில சராசரி 70% விழுக்காட்டினை பெற பாடவேளை அல்லாத ஓய்வு நேரத்தில் இப்பணி மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

- மணற்கேணி மென்பொருள் – 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை 1500 தகவல்கள் 2D, 3D மூலம் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது) – *edwizevellore.com*ல் பதிவிறக்கம் செய்து மாணாக்கர்கள் பயன்பட நடவடிக்கை

*மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.*

- *தொடக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை பயிலும் மாணாக்கர்களுக்கு தேன்சிட்டு, ஊஞ்சல் ஆகிய பத்திரிக்கைகள் வாசிப்பு இயக்கம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். (இதனை பிற்பகல் 1.00 to 1.20pm நேரத்தில் செயல்படுத்தலாம்).*

- *மாணாக்கர்களின் நலன் கருதி அரசால் சொல்லப்படும் திரைப்படங்களை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து மாணாக்கர்கள் கண்டு பயன்பெறும் வகையில் காண்பிக்க தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.*

- *Single Management* – *நிதி உதவி பெறும் பள்ளிகளில் பராமரிக்கப்படும் பணிப்பதிவேடுகளில் பள்ளித் தாளாளர்களால் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

- *வகுப்பாசிரியர்கள் மூலம் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் விவரங்கள் EMISல் பதியப்பட வேண்டும்.*

*எனவே மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்திலும் தனிக்கவனம் செலுத்திட அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*ஒம்..*
*முதன்மைக் கல்வி அலுவலர்,*
*வேலூர்.*

*பெறுநர்*
*அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்*
*வேலூர் மாவட்டம்.*

*நகல்*

1. *மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி),*
2. *மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி),*
3. *மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்).*